

1979-7-25
PERIODICALS DIVISION
LIBRARY

★ பக்கங்கள் 6 | விலை சதம் 40

ஈழநாடு
THE EELANADU

Registered as a Newspaper at the General PostOffice
Sri Lanka under No: QB/8945/78

மலர்: 21 ஆனி: 21 ஷஃபான்: 9 இதழ்: 413
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 5-7-79

வெளிவந்து விட்டன:-

பிறிலியன்ற் கைநூல்கள்

1979 ஆகஸ்ட், 1980 ஏப்பிரல் உயர்தர மாணவர்கட்குரிய G. C. E. A/L, விஞ்ஞான, வர்த்தக புத்தகங்கள்

கிடைக்குமிடங்கள்.

1. பூபாலசிங்கம் புத்தகசாலை
2. ஸ்ரீலங்கா ,,
3. ஜெயசுதாகரன் கபே
சிவலிங்கப்புளியடி

மே. வங்காளத்தில் சூறுவளி!

புதுடில்லி, ஜூலை 24

மேற்குவங்காளத்தில் நேற்று வீசிய சூறுவளி காரணமாக பல பாடசாலைகளும் 100 வீடுகளும் சேதமடைந்தன

இதனால் வீடுகளை இழந்த 2 ஆயிரம் பேர் பாடசாலைகளில் தஞ்சம்புகுந்துள்ளனர்.

இராணுவத்தினர் மீட்பு பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

சூறுவளியை அடுத்து பல இடங்களில் வெள்ளப்பெருக்கும் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

பைசிக்கிள் - மோட்டார்சைக்கிள் - ஸ்கூட்டர்

இறக்குமதி தீர்வைகள் நேற்றிரவு முதல் ரத்து!

உதிரிப்பாகங்களுக்கும் இதே சலுகை

(கொழும்பு)

பைசிக்கிள், மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர், அட்டோ சைக்கிள் போன்ற வாகனங்களின் இறக்குமதி தீர்வை கடந்த நள்ளிரவு தொடக்கம் முற்றாக ஒழிக்கப்பட்டுவிட்டது.

நிதியமைச்சர் திரு. றொனிடி மெல் நேற்று பாராளுமன்றத்தில் இத்தகவலை அறிவித்தார்.

பைசிக்கிள், மோட்டார் சைக்கிள்கள், ஆட்டோ சைக்கிள்கள், ஸ்கூட்டர்கள், முச்சக்கரவண்டிகள் போன்ற வாகனங்களின் இறக்குமதித் தீர்வைகள் ரத்துச் செய்யப்படுவதாக நிதியமைச்சர் அறிவித்தார். பெட்ரோலியப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளமையால் இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக என்று அமைச்சர் கூறினார்.

இந்த வாகனங்களின் உதிரிப்பாகங்களுக்கான இறக்குமதி [illegible] படுகின்றது. உள்ளூர்ப் பொருத்துவதற்காக இறக்குமதி செய்யப்படும் இம்மாதிரி வாகனங்களின் உதிரிப்பாகங்களுக்கும் இறக்குமதி தீர்வை ஒழிக்

6-ம் பக்கம் பார்க்க

பாண்டிச்சேரி மாநில தேர்தல்

சென்னை, ஜூலை 4

பாண்டிச்சேரி மாநில சட்டசபைக்கான தேர்தல் ஆகஸ்ட் 17ம் திகதி நடைபெறாது அனேகமாக 19 அல்லது 20ம் திகதி நடைபெறலாம் என்று இப்பொழுது அறியப்படுகின்றது.

ஆகஸ்ட் 17ம் திகதி அங்கு ஒருவிழா நடைபெறவிருப்பதால் தேர்தலை வேறொரு தினத்தில் நடத்தும்படி அம்மாநில நிர்வாகிகள் கோரியுள்ளனர்.

கூட்டணி எம். பி. க்களை வரவேற்பர்

[யாழ்ப்பாணம்]

வவுனியா, அனுராதபுரம் மாவட்ட எல்லைகளை மீண்டும் நிர்ணயிப்பது சம்பந்தமாக பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை எதிர்த்து பாராளுமன்றத்தைப் பகிஷ்கரித்துவரும் தமிழர் விடுதலைக் கூட்டணி எம் பிக்கள் நாளைக்காலை புகையிரத மூலம் யாழ்வந்து சேர்வர்.

இவர்களை வவுனியாவிலிருந்து சகல புகையிரத நிலையங்களிலும் சிறந்த வரவேற்பளிக்க இளைஞர்கள் ஏற்பாடு செய்துவருகின்றனர்: [கு]

சிறைச்சாலை அதிபர் எச்சரித்து விடுதலை

[மாவிட்டபுரம்]

மல்லாகம் நீதிபதியை அவமதித்த யாழ். சிறைச்சாலை சுப்ரிண்டன் எச்சரித்து விடுதலை செய்யப்பட்டார்.

மல்லாகம் நீதிபதியால் றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்ட இளம்யுவதிஒருவரை கைதடி இரட்சணியசேனையில் அனுமதிப்பதற்கு 3 தினங்கள் தாமதித்ததால் அது தொடர்பான விளக்கத்தை யாழ். சிறைச்சாலை சுப்ரிண்டனிடம் மல்லாகம் நீதிமன்றம் கோரியிருந்தது.

இது குறித்து சிறைச்சாலை சுப்ரிண்டன் அளித்த பதிலில் மல்லாகம் நீதிபதியை அவமதிக்கும் வகையில் சில வாக்கியங்கள் காணப்பட்டதால் அவரை தம்முன் ஆஜராகும்படி நீதிபதி உத்தரவிட்டிருந்தார்.

இதற்கிணங்க மல்லாகம் நீதிமன்றத்தில் யாழ் சிறைச்சாலை சுப்ரிண்டன் எஸ் ரி தர்மரத்

(6-ம் பக்கம் பார்க்க)

சாக்குமூடையுடன் மூவர் கைது

[யாழ்ப்பாணம்]

இரண்டு சாக்கு மூடைகளுடன் வீதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய மூவரைப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

அச்சுவேலியைச் சேர்ந்த காசிநாதன் பத்மநாதன், யாழ்ப்பாணத்தை சேர்ந்த முருகேசு விஜயகுமார், சில்லாலையைச் சேர்ந்த சவரிமுத்து அன்ரன் ஆகியோரை யாழ். பொலிசார் சந்தேகத்தின்மீது கைது செய்து விசாரணைக்குட்படுத்தினர்.

இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படும் இரண்டு சாக்கு மூடைகளைச் சோதனை செய்த பொலிசார் சாக்குகளில் இருந்து பெருமளவு பருப்பு, சீனி, சீரகம் ஆகியவற்றுடன் எவரெடி பற்றறிகளும், பீடிக்கட்டுகளும் சைக்கிள் ரியூப்புகள் பாமெரடின்கள் ஆகிய பொருட்கள் கண்டெடுத்தனர்.

அச்சுவேலியைச் சேர்ந்த காசிநாதன் பத்மநாதன் என்பவர் கிளிநொச்சியில் வேலை செய்து வருவதாகவும் மற்ற இருவரும் யாழ்ப்பாணத்திலேயே வசித்து வருவதாகவும் விசாரணையில் இருந்து தெரிய வருகிறது.

சந்தேக நபர்கள் கடையை உடைத்து மேற்படி பொருட்களைத் திருடியிருக்கலாமெனப் பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

எப்பகுதியிலாவது கடை உடைத்துப் பொருட்கள் களவாடப்பட்டிருந்தால் யாழ். பொலிசாருடன் தொடர்பு கொள்ளுமாறு பொலிசார் வேண்டுகோள் விடுத்துள்ளனர். [கொ]

சீனத்தூதுவர் மரணம்

[கொழும்பு]

இலங்கையில் மக்கள் சீனக் குடியரசின் தூதுவராகஇருந்து வந்த திரு. வான் சுவால் நேற்று காலமானார். சில காலமாகவே இவர் சுகவீனமுற்றிருந்தார்.

உடுப்பிட்டி ப. நோ. கூ. ச.

ஊழியர்கள் தொடர்ந்து வேலைநிறுத்தம்

(நெல்லியடி)

கடந்த 2ந் திகதியிலிருந்து வேலைநிறுத்தம் செய்துவரும் உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் தொடர்ந்து வேலைநிறுத்தம் செய்துவருகின்றனர்.

ஒன்பது கோரிக்கைகளை முன் வைத்து வேலைநிறுத்தத்தில் குதித்துள்ள ஊழியர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு சங்க இயக்குநர்கள் இதுவரை முயற்சிக்கவில்லை. தமது கோரிக்கைகள் கிடைக்கும்வரை தொடர்ந்து வேலைநிறுத்தம் செய்யவுள்ளதாக ஊழியர்கள் தெரிவித்தனர்.

இவர்களது வேலைநிறுத்தத்துக்கு ஆதரவாக வடமராட்சியைச் சேர்ந்த புலோலி, பருத்தித்துறை, கட்டைவேலி, நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்களும் ஒரு வாரத்தில் அடையாள வேலைநிறுத்தம் செய்யவுள்ளதாக இலங்கை கூட்டுறவு ஊழியர் சங்க செயலாளர் திரு. பி. இராசேந்திரம் தெரிவித்தார். [கு]

பகிஷ்கரிப்பை நீடிப்பதா-கைவிடுவதா?

21ம் திகதி பொதுசபை கூடி தீர்மானிக்கும்

[கொழும்பு]

தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்றக்குழு நேற்று பகல் வெகுநேரம்வரைகூடி இன்றைய அரசியல் நிலைமை குறித்து ஆராய்ந்தது.

அனுராதபுர மாவட்டத்தின் சிலபிரிவுகளை வவுனியாவுடன் இணைப்பது தொடர்பான தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும்விதத்தில் பாராளுமன்றக் கூட்டங்களைப் பகிஷ்கரிப்பதென தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்றக்குழு ஏற்கனவே முடிவு செய்துள்ளது.

கட்சியின் பொதுச்சபை 21ம் திகதி வவுனியாவில்கூடி இதுபற்றி ஒருமுடிவு எடுக்கும்வரை பகிஷ்கரிப்பைத்தொடர்வதென்று குழுமுடிவுசெய்துள்ளது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கைக்குழு கூட்டம் 14ம் திகதி வாழைச் சேனையில் நடைபெறவிருக்கிறது. 12ம் திகதி கூட்டணியின் பொதுக் கூட்டமொன்று வவுனியாவில் நடைபெறவிருக்கின்றது.

நேற்று பாராளுமன்றத்துக்கு த. வி. கூட்டணி உறுப்பினர்கள் எவரும் வந்திருக்கவில்லை.

ஊர்காவற்றுறை உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் பெயரில் இருந்த கேள்விகளை அங்கத்தவர்கள் எவரும் கேட்க முன்வராததினால் அவைகளுக்கு விடையளிக்கப்படவில்லை.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்தின் ஆசனத்தில் உடுதும்புர எம். பி. திரு. ரம்பண்டா சித்தநாயக்க சிறிது நேரம் அமர்ந்திருந்தார்.

புதிய பாராளுமன்றக் கட்டடத்தை கோட்டையிலுள்ள ஸ்ரீ ஜயவர்த்தனபுரத்தில் எழுப்புவதற்கான பிரேரணையை சபை ஏற்றுக்கொண்டது.

கூட்டணி எம் பி க்கள் அமைச்சர்களின் குழுக்கள், மற்றும் நிரந்தரக் குழுக்களின் கூட்டங்களிலும் கலந்து கொள்ளமாட்டார்கள் என்று தெரிகின்றது (ம)

வரி விளம்பரம்

விற்பனைக்கு

பேஜோ 404 டீசல் 1973 மொடல் விற்பனைக்குண்டு சி. சிவசுப்பிரமணியம், சிவன்வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். 2934

நன்றி நவிலல்

திருமதி மு. பத்மாவதி

காலஞ்சென்ற திருமதி எம். பத்மாவதி அவர்களின் மரணச்சடங்கிலும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் பங்கு பற்றி அனுதாபம் தெரிவித்த உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.
வ. முத்துலிங்கம். 2946

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

வெற்றுச்சாக்கு விற்பனைக்கான கேள்வி விண்ணப்பப் பத்திரம்

கரைச்சி வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் விற்பனைக்கு உள்ள பலதரப்பட்ட வெற்றுச்சாக்குகளையும் விற்பதற்கான கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் யாவும் தலைவர், கரைச்சி வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பரந்தன் என விலாசமிடப்பட்டு, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வெற்றுச்சாக்கு விற்பனை" என எழுதப்பட்டு 10-7-79 காலை 10 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

வைப்புப் பணம் ரூபா 100/- கட்டி விண்ணப்பப்பத்திரங்களைச் சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஒப்பம்
தலைவர்.

பொது முகாமையாளர்,
சரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம், பரந்தன்.
2-7-79. 2941

கேள்வி அறிவித்தல்

பின்வரும் திருத்த வேலைகளுக்கும் கற்கள் விநியோகிப்பதற்கும் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. பத்திரங்களை பூநகரி நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்தில் 10-07-79-ந் திகதி தொடக்கம் 13-07-79-ந் திகதி வரையும் பெற்றுக்கொள்ளலாம். 18-07-79-ந் திகதி காலை 10-00 மணி வரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளுதல் முடிவடையும். மேலும்விபரங்கள் தேவைப்படின் பூநகரி நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

1. செட்டியகுறிச்சி வீதிக்கு கற்கள் விநியோகம் — 1-ம் கட்டை
2. விக்சன் வீதிக்கு கற்கள் விநியோகம் — 5-ம் கட்டை
3. புளயபொக்கணை — வட்டக்கச்சிவீதி கற்கள் விநியோகம் — 4-ம் கட்டை
4. உருத்திரபுரம் — கிளிநொச்சி வீதி கற்கள் விநியோகம் — 1-ம் 2-ம், 3-ம் கட்டைகள்
5. இராமநாதபுரம் — கிளிநொச்சி வீதி கற்கள் விநியோகம் — 3-ம், 4-ம், 5-ம் கட்டைகள்
6. சாவகச்சேரி — தனங்கிளப்பு வீதி திருத்த வேலைகள் — 2-ம் கட்டை
7. வலைப்பாடு இறங்குதுறை நுழைவீதி திருத்த வேலை
8. பரந்தன் நெடுஞ்சாலைக் களஞ்சிய வீதிக்குக் கற் விநியோகம்.

சி. கணேசரத்தினம்,
பிரதான பொறியியலாளர்
(பெருந்தெருக்கள்,)
யாழ்ப்பாணம்.

திகதி: 03-07-79.

(2950)

பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

கோப்பாய், கோப்பாய் தெற்கு, முதலியார் வளவைச் சேர்ந்த காலஞ்சென்ற தெய்வேந்திரா குமாரசுவாமி என்பவரின் மரணசாதனத்தினதும், எழுத்தாவணத்தினதும் விடயத்தில்,

மரணமெய்தியவர்.

தம்பிப்பிள்ளை தெய்வேந்திரா குமாரசுவாமி கைம்பெண் சிவகாமிப்பிள்ளை, முதலியார் வளவு, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

மனுதார்.

மரணசாதன
வழ. இல: த/3398

மேலே உள்ள இலக்கம் கொண்ட மரணச்சொத்து வழக்கு மேற்குறிப்பிடப்பட்ட நீதிமன்றத்தில் இறந்தவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் இருப்பின் 1979ம் ஆண்டு ஆடி மாதம் 6ம் திகதிக்கு முற்பகல் 9மணிக்கு முன்னர் இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக் கட்டளை ஏன் பூரணமாக்கப்படலாகாது என்பதற்குக்காரணம் காட்டுமாறு தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1979ம் ஆண்டு ஆனி மாதம் 19ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி,

பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்.

2930

குளிர்ச்சிப் பொங்கல்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு மேற்கு தெற்காட்டு அம்மன் கோவில் வருடாந்த குளிர்ச்சிப் பொங்கலும், அம்பாளின் அலங்காரத் திருவிழாவும் பதினோராம் திகதி விமரிசையாக நடைபெறவுள்ளது.

இன்றைய பலன்

ஆனிமாதம் 21-ம் திகதி
[வியாழக்கிழமை]
(5-7-1979)

மேடம்: கவர்ச்சிகரமான தினம், காதலர்கள் இன்பத்தில் மிதப்பர், கரும்புபோல வாழ்க்கை இனிக்கும், களவிரவழியாலும் சுகம் கிடைக்கும், செவ்வாக்கு மேலும் சிறப்படைய இடமுண்டு.

இடபம்: கடமையில் தடை ஏற்படும், பிறர் நம்பிக்கையைத் தவிர்க்கவும், தீர்மானமான சிந்தனையே சிறப்பைத் தரும்.

மிதுனம்: நீண்ட காலத்தின் பின்பு இன்று மனதுக்குப் பிடித்த ஒரு சம்பவம் நடைபெறும், முதியவர் ஒருவர் வழிகாட்டியாக இருப்பார், ஆலய வழிபாட்டில் அதிக ஆர்வம் செலுத்துவீர்கள், நல்லதினம்.

கடகம்: எதிலும் முன்னணியில் நிற்பீர்கள், பிறரின் கவனம் உங்கள் மீது செலுத்தப்படும், சொந்தமான தொழில் செய்வதில் ஆர்வம் பிறக்கும், அரசாங்க ஊழியராயின் பதவி உயர்வு கிடைக்கலாம்.

சிங்கம்: செலவுக்கு வேண்டிய பணம் தாராளமாகக் கிடைக்கும், செய்தொழிலும் விருத்தியுண்டு. உடன் பிறந்த ஒருவருக்கு மகிழ்ச்சிகரமான சம்பவமும் இடம்பெறலாம், தகுதியிலும் உயர்வுக்கு இடமுண்டு.

கன்னி: எதிலும் தடுமாற்றம் ஏற்படும், குசுகுசுப் பேச்சுக்கள் மூலம் அவதூறுகள் வரப்படலாம், வியாபாரத்துறையில் மந்தநிலை காணப்படுகிறது, உடல் நலத்தைப் பேணிக்கொள்ளவும்.

(6-ம் பக்கம் பார்க்க)

கொக்குவில் இந்துக்கல்லூரி இல்ல விளையாட்டுப் போட்டி

06-07-79 வெள்ளிக்கிழமை பி. ப. 2-30 மணி
பிரதம விருந்தினர்:
தொழிலதிபர்
திரு. என். சின்னத்துரை அவர்கள்
திருமதி சின்னத்துரை அவர்கள்
பரிசில்கள் வழங்குவார்
(தனிப்பட்ட அழைப்பிதழ்கள் இல்லை)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
3-7-79. 2949

வடமராட்சிப் பிரதேச கால்நடை வளர்ப்போர் சங்கம்

பருத்தித்துறை

வருடாந்தப் பொதுக் கூட்டம்

இடம்: றேமன் கத்தோலிக்க பாடசாலை,
வல்வெட்டித்துறை.
(சந்தைக்கருகாமையில்)
காலம்: 07-07-1979 (சனிக்கிழமை)
நேரம்: காலை 9-30 மணி
தலைவர்: ப. ப. தாமு (உப தலைவர்)

அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்கும்படி தயவுடன் வேண்டப்படுகின்றனர்.

ப. ப. தாமு
உபதலைவர்

தி. அமிர்தலிங்கம்
செயலாளர்

அங்கத்தவர்களாகச் சேர விரும்புவர்கள் கூட்டம் நடைபெறும் தினத்தன்று வருடச் சந்தா ரூபா 4/- செலுத்தி சேர்ந்துகொள்ளலாம். 2892

அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோவில்

அதிஷ்ட லாபச்சீட்டு!

முடிவுகள்

1-வது பரிசு — 3123 P. துரைசிங்கம், சுன்னாகம்.
2-வது பரிசு — 2412 அ. யோகநாதன், கொழும்பு.
3-வது பரிசு — 4090 P. இராஜேஸ்வரி, கொழும்பு.
4-வது பரிசு — 2158 மங்கையற்கரசி, அளவெட்டி.
5-வது பரிசு — 4204 த. மகேந்திரராசா, யாழ்ப்பாணம்.
6-வது பரிசு — 840 க. ஜெயதாஸ், அளவெட்டி.
7-வது பரிசு — 2021 க. சுப்பிரமணியம், அளவெட்டி.
8-வது பரிசு — 2419 அ. யோகநாதன், கொழும்பு.
9-வது பரிசு — 966 அருந்தவராஜா, இளவாலை.
10-வது பரிசு — 4214 யாழ்ப்பாணம்.
11-வது பரிசு — 1126 K. T. அளவெட்டி.
12-வது பரிசு — 3925 ச. இரஞ்சினி, அளவெட்டி.
13-வது பரிசு — 2243 ப. கற்பகவல்லி, அளவெட்டி.

ரிக்கற்றுகளை கொடுத்து உடன் பரிசுகளைப் பெற்றுக் கொள்ளவும்

இங்ஙனம்
அம்பாள் தொண்டர் சபை

2947

"எலெக்ரோனிக்" கைக் கடிகாரத்தின்

எவறெடி மினியெச்சர் பற்றரிகளுக்கு
வடமாகாண ஏக விநியோகஸ்தர்களான

நியூவிக்ரேஸ் ஸ்தாபனத்தார்

றேடியோ திருத்துபவர்களின் கவனத்திற்கு
"I. C., Transistor" விற்பனைக்கு
கீழ்காணும் நம்பர்கள் கைவசம் உண்டு
என்பதை அறிவிக்கின்றார்கள்

I. C.

A 3122
A 3155
A 4032
A 4031 P
A 4032 P
TA 7205 P
TA 7208 P
UPC 41 C
UPC 563 H
UPC 566 H
HA 1314
HA 1329
HA 1361
LA 4112
TBA 8105 H
TCS 760 B
AN 7115
1001012 (orion)
L. E D.
(Yellow, Green, Red)

Transistors

A 490
A 634
A 671
A 678
A 679
A 683
A 699
A 706
A 733
A 793
A 836
C 490
C 634
C 673
C 828
C 1013
C 1060
C 1061
C 1096
C 1213
C 1226
C 1312

C 1383
C 1466
C 1568
C 1628
2 SD 187
B 545
BC 307
BC 547
BC 548
BD 136
BF 194
BF 195
BF 495
EBC 147
EBF 195 C
ECG 159
ED 1402
ED 1702
SG 104
MJE 9450
MAC—11—1

மக்கள் கருத்து

ஒளவையார்

பழைய படங்களின் புதிய பிரதிகள் வருவதால் சில நன்மைகள் உண்டு. அவற்றைப் புதிய சந்ததி பயன்படுத்த வேண்டும் என்பதால் இதனை எழுதுகிறேன். 25 ஆண்டுகளுக்குமுன் இரு சந்ததியினரை மகிழ்வித்த அறிவூட்டிய, அமரர் வாசனின் "ஒளவையார்" மீண்டும் காட்டப்படுகிறது. பிரமாண்டமான படம். பழந்தமிழ் நாட்டின் கிராமங்கள், மாளிகைகள், தொழிலாளர், அரசர்கள், கோவில்கள், மேளதானங்கள்; இவற்றின் மத்தியிலே அழகான கிழவி உருவில் தமிழ் அன்னை ஒளவையார் நடமாடுகிறார்.

நல்ல வேளையாகப் படத்தின் ஒளியிலோ, ஒலியிலோ ஒரு கீறல்கூட இல்லை. புதிய படம்போல் பிரதி இருக்கின்றது. ஒளவையாரைப் பார்க்காத சந்ததியினர் தமது பெற்றோருடனோ ஆசிரியருடனோ பார்க்கத் தவறக்கூடாது. ஒளவையார் ஒரு கல்விப் படமாகையால் பாடசாலைகள் தமது மாணவர்களை அழைத்துச் செல்லலாம்.

'நந்தி'

மருத்துவபீடம்,
கைதடி.

0 0 0

யாழ். ஆஸ்பத்திரி நிர்வாகம் கவனிக்குமா?

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி வார்ட்டிலிருந்து சிகிச்சை பெற்றுவரும் நோயாளிகளின் பெரும்பாலோருக்குத் தினமும் "கிறீம் கிராக்கஸ்" என்ற பிஸ்கட் தேவைப்படுகிறது.

இந்த பிஸ்கட் பெட்டி ஆஸ்பத்திரிக்கு வெளியில் அதன் உண்மை விலையான 4 ரூபாவிற்கு எங்கும் கிடைக்கிறது. பெரியாஸ்பத்திரியிலுள்ள 'கன்டீனில்' இதே பிஸ்கட் பெட்டி 6 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகிறது. இதனால் ஒரு பெட்டிக்கு 2 ரூபா லாபம் கிடைக்கிறது. இது ஏழை நோயாளிகளின் வயிற்றில் அடிப்பதாகும்.

நோயாளிகளோ அல்லது அவர்களுக்கு உதவியாக வார்ட்டில் நிற்பவர்களோ எந்த நேரமும் வெளியில் சென்றுவரமுடியாது. அதனால் 6 ரூபா கொடுத்தே 'பிஸ்கட் பெட்டி' வாங்கவேண்டிய நிலையில் உள்ளனர். ஆஸ்பத்திரி நிர்வாகம் உடனடியாக இது பற்றிக் கவனம் செலுத்துவதுடன், ஆஸ்பத்திரி நலன்புரிச் சங்கமும் உடன் அக்கறை எடுக்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

க. தி. ரவீந்திரன்.

நல்லூர்.

0 0 0

நயினை யாத்திரிகர் அவல நிலை

நயினதீவு நாகபூஷணி அம்மன் கோவில் உற்சவத்தை முன்னிட்டு அம்பிகையைத் தரிசிப்பதற்காக வெளியூர்களிலிருந்துவரும் அடியார்கள் திருவிழா முடிந்ததும் தங்கள் பிரயாணத்தைத் தொடர முடியாமல் குறிகாட்டுவான் துறைமுகத்தில் பஸ்ஸிற்காக பல மணிநேரம் தங்கிக்கிடக்க வேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளது. எனவே யாத்திரிகர்களின் இந்த அவலநிலையைப் போக்க, உரியவர்கள் தயவு செய்து நடவடிக்கை எடுப்பார்களா

க. அருளானந்தசிவம்.

சீனிவாசகம் வீதி,
யாழ்ப்பாணம்.

"நாவலர் பரம்பரையில் தோன்றியவர் பண்டிதமணி'

பாராட்டு விழாவில் கைலாசநாதக்குருக்கள்

(சாவகச்சேரி)

"எங்கள் நாட்டின் தவச் செல்வராய் வாழ்ந்தவர் நாவலர் பெருமான். அவரது பரம்பரையில் வந்தவர் பண்டிதமணி. மிகச் சிறந்தவைகளான கல்வியும் ஒழுக்கமும் ஒருவரிடத்திலே குடிகொள்ளுமாயின் அதற்குத் தவம் வேண்டும். ஆழ்ந்த கல்வியும் சைவசித்தாந்த செந்நெறி ஒழுக்கமும் ஒருங்கே அமையப் பெற்றவர் பண்டிதமணி, 'இலக்கியகலாநிதி' என்ற உயர்விருதினைப் பெற்ற பண்டிதமணியை அவரின் பிறந்தகமான தென்மராட்சியில் பாராட்டுவதும், அவர் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து நூல்வடிவில் வெளியிடுவதும் சாலவும் பொருத்தமுடையது."

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி கணபதிப்பிள்ளையைப் பாராட்டி தென்மராட்சி மக்கள் சார்பில் சாவகச்சேரி டிறிபேக்கல்லூரியில் எடுக்கப்பட்ட பெருவிழாவுக்குத் தலைமைவகித்துப்பேசிய யாழ் பல்கலைக்கழக இந்துநாகரிகத் துறைத்தலைவர் பேராசிரியர் கா கைலாசநாதக்குருக்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பண்டிதமணி எழுதிய ஆறுமுகநாவலர் கட்டுரைத் தொகுப்பை வெளியிட்டு வைத்த யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் திரு. க. கைலாசபதி பேசுகையில் "பெரியார் பண்டிதமணி 1949ல் யாழ். இந்துக்கல்லூரியில் நான் படித்துக்கொண்டிருந்தபோது கல்லூரி மலரில் அருட்பா பற்றி ஒரு கட்டுரை எழுதியிருந்தார்கள். நாவலர் பற்றி நான் முதன் முதலில் வாசித்த கட்டுரை அதுவேயாகும். அன்று தொடக்கம் பண்டிதமணியின் ஒவ்வொரு எழுத்தையும் நான் தவறாமல் வாசித்துள்ளேன். 1949ல் முதலில் வாசித்த கட்டுரையில் காணப்பட்ட உணர்ச்சி ஓட்டத்தை முப்பது வருடங்கள் கழிந்தும் இன்றும் அவரது எழுத்தில் காண்கின்றேன். நீதி, தர்மம் என்ற அர்த்த புஷ்டியுள்ள சொற்கள் மூலம் விஷயங்களை எடுத்து விளக்குவது அவருக்கே உரிய தனி முறை. இலங்கைப் பல்கலைக் கழகம் தமிழறிஞருக்கு இலக்கிய கலாநிதிப் பட்டத்தை வழங்க முன்வந்தபோது, நான் யாழ். வளாகத் தலைவராக இருந்த காரணத்தினால் பெரியார் பண்டிதமணியின் பெயரைச் சிபார்சுசெய்யும் ஒரு பாக்கியத்தைப் பெற்றிருந்தேன். குறித்த பட்டம் அவரை அடைந்த பின்னர் அவரது பிறந்தகத்தில் எடுக்கும் விழாவில் பங்குபற்றி, அன்னாரின் "ஆறுமுகநாவலர்" என்னும் நூலை வெளியிட்டு வைப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். எங்கள் தலைமுறையில் ஈடிணையற்ற பெரியாரான பண்டிதமணியின் கைவசமுள்ள ஏனைய கட்டுரைகளும் நூல்வடிவு பெற அன்பர்கள் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்" என்றார்.

பண்டிதவித்துவான் க. கிருஷ்ணபிள்ளை முதற்பிரதியைப் பெற்றார்.

இசைப்புலவர் திரு. சி. செல்லத்துரை பாராட்டிதழை வாசித்து, வழங்கியதையடுத்து உரையாற்றிய மாவட்ட நீதிபதி திரு கி. பாலகிட்ணர் "முதன் முதலாக மதுரைப் பண்டித பரீட்சையில் சித்தியடைந்த பண்டிதமணி சிறந்த பேராசிரியராக இலட்சியமனப்பான்மையுடன் வாழ்ந்து சமயத்துக்கும் தமிழுக்கும் தொண்டாற்றியமை மிகவும் பாராட்டுக்குரியதாகும். அன்னாரின் தோற்றமே எவர் மனதையும் ஈர்க்கவல்லது" என்றார்.

திரு சொக்கன் பேசுகையில் "பண்டிதமணியின் ஒவ்வொரு எழுத்திலும் நாவலர் அடிச்சுவட்டைக்காணலாம். நாவலரின் உண்மைச் சரித்திரத்தை தக்கசான்றுகளுடன் எடுத்துக் காட்டி நிலைநாட்டிய பெருமை பண்டிதமணிக்கே உரியது" என்றார்.

மாவட்ட நீதிபதி திரு க ஞானச்சந்திரன் பேசுகையில் "முதறிஞரான பண்டிதமணிக்கு இலங்கைப் பல்கலைக்கழகம் 'இலக்கிய கலாநிதி' என்ற பட்டத்தினை வழங்கியதை விட்டு, தென்மராட்சி மக்கள் மகிழ்ச்சியடைவதில் பெருமைப்படுகின்றேன்" என்றார்.

பண்டிதர் க சரவணமுத்து, ஆசிரியமணி ஆர் டி சுப்பிரமணியம் ஆகியவர்கள் பேசியதையடுத்து விழாச் செயலாளர் பண்டிதர் பொ கந்தையினார், வடமாநிலக்கல்வி அதிபதி திரு தி மாணிக்கவாசகர், சைவப்பெரியார் க சிவசுப்பிரமணியம் முதலியோரின் ஆசிச் செய்திகளை வாசித்து நன்றியும் தெரிவித்துப்பேசினார்.

பண்டிதமணி தமது பதிலுரையில் "இம்மியளவேனும் நலப்பாடு என்பால் இருப்பதுண்டாயின் அது நாவலர் பெருமானின் ஆன்மசக்தியால் கிடைத்ததேயாம். பாராட்டு அப்பெருமான் பாதங்களுக்கே உரியதாம். இன்றுவெளியிடப்பட்ட ஆறுமுகநாவலர் என்னும் நூலினை கருத்தூன்றிப் படிக்குமாறு வேண்டுகின்றேன்" என்றார்.

நெல்லியடி நூல் நிலையத்தில் வாசகர் கஷ்டம்

நெல்லியடிப் பட்டினசபையின் பரிபாலனத்தின் கீழியங்கும் நெல்லியடிப் பட்டின பொது நூல் நிலையம் இன்று வடமராட்சிப்பகுதியில் சிறந்த நூல் நிலையமாக விளங்கிவருகின்றது. ஆனால் இந்நூல் நிலையத்தில் தரமான வார, மாத சஞ்சிகைகளோ, வெளியீடுகளோ இல்லாமல் இருப்பது பெருங் குறையாகவுள்ளது. இதனால் வாசகர்கள் அதிருப்தியும், கவலையும் அடைந்துவருகின்றனர்.

சில கதிரைகள் பழுதான நிலையில் சேதமடைந்துபோய்த் தொங்குகின்றது சிலமூட்டைப் பூச்சிகளின் வாசஸ்தலமாக விளங்குகின்றன. இதுவும் அசௌகரியத்தை ஏற்படுத்துகின்றது.

அத்துடன் மின் பல்புகள் சிலவும் சுட்டுவிட்டதால் போதியளவு வெளிச்சமின்றி உள்ளது இதனால் பார்வை குறைந்தோர் பத்திரிகைகளைப் படிக்க முடியாது சிரமமடைந்துவருகின்றனர்.

நெல்லியடிப் பட்டினசபை இக்குறைகளைப் போக்கி ஆவன செய்ய முன்வருமா?

எம். சுபேந்திரன்.

கரவெட்டி.

'தமிழ் ஈழம்'

மசாச்சூசெட்ஸ் தீர்மானம்

அமெரிக்க கருத்தை குறிக்காது

யு. எஸ். உயர் அதிகாரி விளக்கம்

தமிழ் 'ஈழம்' பற்றி அமெரிக்க மசாச்சூசெட்ஸ் மாநில சட்டசபை அண்மையில் நிறைவேற்றிய தீர்மானம் குறித்து அமெரிக்க சர்வதேச தொடர்புகள் நிறுவனத்தின் பொது விவகாரங்களுக்கான கவுன்ஸிலர் திரு. ரிச்சர்ட் வொன் கிளாட்ஸ் அறிக்கையின் விபரம் வருமாறு:

மசாச்சூசெட்ஸ் மாநிலச் சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட தமிழ்ஈழம் பற்றிய தீர்மானம் தொடர்பாகப் பத்திரிகைகளில் வெளிவந்த கருத்துக்களை நான் அக்கறையுடன் வாசித்தேன். இந்த நடவடிக்கை அமெரிக்காவின் உத்தியோகபூர்வமான கொள்கையைக் குறிக்கிறது என்ற கவலை கொஞ்சம் இருப்பதாகத் தோற்றுகிறது.

மசாச்சூசெட்ஸ் கவர்னரதும் மாநிலச்சட்டசபையினதும் நடவடிக்கைகள் அமெரிக்க அரசாங்கத்தின் கொள்கையையோ கருத்துக்களையோ குறிப்பதில்லை என்பதை நான் எடுத்துக்கூற விரும்புகிறேன். அமெரிக்க உதவிபெறும் நாடுகளில் மனித உரிமை நடைமுறைகள் பற்றி காங்கிரசுக்காக ராஜாங்க அமைச்சு தயாரித்த அறிக்கையில் அமெரிக்கக் கருத்துக்கள் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டன

இலங்கை தனிநபர் உரிமைகளைப் பாதுகாத்து வந்துள்ளதையும் சிறுபான்மைக் குழுக்களின் கோரிக்கைகளுக்கு இடமளிக்கத் தொடர்ந்து மேற்கொள்ளும் முயற்சிகளையும் அந்த அறிக்கை பாராட்டுகிறது.

வெளிநாட்டு உறவுக்கு மத்திய அரசே பொறுப்பு

ஐக்கிய அமெரிக்காவின் அரசிலமைப்பு வெளிநாட்டு உறவுகளை நடத்தும் பொறுப்பை மத்திய அரசாங்கத்துக்கு அளிக்கிறது. மத்திய அரசாங்கத்தில் நிர்வாக மற்றும் சட்டத்துறைப் பிரிவுகள் கொள்கை உருவாக்கப் பணியைப் பகிர்ந்துகொள்கின்றன. பொதுசன அபிப்பிராயம் முக்கிய பங்கு வகிக்கத்தான் செய்கிறது. மேலும் தனிநபர்கள் பலரும், ஸ்தாபனங்களும் விசேட அக்கறையுள்ள குழுக்களும் தனியான பிரச்னைகள் தொடர்பாகத் தாம் கொண்டுள்ள கருத்துக்களுக்கு ஆதரவு அளிக்குமாறு அரசாங்கத்திடம் மனுச் செய்கின்றன. இப்படியான மனுக்களைச் சமர்ப்பிப்பவர்கள் வழக்கமாகத் தங்கள் கோரிக்கைகளை அமெரிக்க காங்கிரஸ் உள்ள தங்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளுக்கு அனுப்புவர். ஆனால் சில சந்தர்ப்பங்களில் அவர்கள் தங்களுடைய மாநில சட்டசபைகளின் முக்கியமான கவனமும் ஒரே பொறுப்பும் உள்நாட்டு விவகாரங்கள் தொடர்பானவை என்று வரையறுக்கப்பட்டிருந்த போதிலும், அடிக்கடி அவை பல்வேறு வெளிநாட்டுக் கொள்கை விடயங்கள் பற்றிய கருத்துக்களை வெளியிடுகின்றன. இவை தனியொரு சட்டசபைஉறுப்பினரோ அவருடைய தொகுதியைச் சேர்ந்த சிலரோ அக்கறைகொண்டுள்ள விடயங்களாக இருக்கும்.

எண்ணிறந்த சந்தர்ப்பங்களில் பல்வேறு மாநிலச்சட்டசபைகளில் தீர்மானங்கள் உதாரணமாக வடஅயர்லாந்து, சைப்பிரஸில் கிறீஸினதும் துருக்கியினதும் பங்கு, ஆபிரிக்காவில் இருந்து திரும்புபவர்களை போர்த்துக்கல் அரசாங்கம் கையாளும் முறை, சில மதங்களைப் பின்பற்றுவோர் நடத்தப்படும் விதம் என்பன தொடர்பாக நிறைவேற்றப்பட்டுள்ளன.

ஜனாதிபதியைக் கோருவதே நோக்கம்

இந்தத் தீர்மானங்களும் பிரகடனங்களும் சட்டமூலமோ மத்தியஅரசாங்கத்தின் மீதோ எந்தக் கட்டுப்பாட்டையும் விதிக்கவில்லை. வெறுமனே சட்டசபையின் கருத்தைப் பதிவுசெய்வது அல்லது ஒரு குறித்த ஒரு நடவடிக்கையை எடுக்குமாறு ஜனாதிபதியையோ வாஷிங்டனிலுள்ள காங்கிரஸையோ கோருவதுதான் அவற்றின் நோக்கமாகும். வெளிவிவகாரத்துறையில் மாநிலங்களுக்கு அரசமைப்பு அதிகாரம் கிடையாது என்ற உண்மை அவை தம்முடைய தொகுதிகளைச் சேர்ந்த சிலருக்கு அக்கறையுள்ள விடயங்கள் தொடர்பாகக் கருத்துக்களை வெளியிடுவதைத் தடுக்காது.

பேச்சுச் சுதந்திர உரிமையும் பிரஜைகள் தங்களுடைய அரசாங்கத்திடம் மனுச் சமர்ப்பிக்கும் உரிமையும் ஐக்கிய அமெரிக்காவில் பேணி வளர்க்கப்பட்ட பாரம்பரியங்களாகும் மேலும் எமது சட்டசபை உறுப்பினர்கள் தம்மைத் தெரிவுசெய்யும் போது மக்களுக்குப் பதிலளிப்பதில் ஆர்வமுள்ளவர்களாவர்.

அப்படியான தீர்மானங்கள் பூரணமற்ற தகவல்களை அடிப்படையாகக்கொண்டவையாக இருக்கும் சந்தர்ப்பங்களில் ஒரு பிரச்னையின் ஒரு பக்கத்தை மட்டும் எடுத்துக்காட்டி ஒரு வெளிநாட்டின் அரசாங்கத்தையும் பிரஜைகளையும் புண்படுத்தும்போது, அந்தப் பிரச்னையின் சிக்கலான தன்மையையும் வேறுபட்ட கண்ணோட்டங்களையும் மாநில அதிகாரிகளுக்கு விளக்கும் பொறுப்பை ராஜாங்க அமைச்சு ஏற்கிறது. மசாச்சூசெட்ஸ் தீர்மானம் சம்பந்தப்பட்டமட்டிலும் அமெரிக்க அரசாங்கம் அவ்வாறு செய்துள்ளது. (இ)

4 காங்கிரஸ்கட்சிகளை இணைக்க முயற்சி

புதுடில்லி, ஜூலை 4

இந்திரா காங்கிரஸ் உத்தியோகபூர்வ காங்கிரஸ் மகாராஷ்டிபுர 'பவார்' காங்கிரஸ், கர்நாடக காங்கிரஸ் ஆகிய கட்சிகளை ஒன்றிணைப்பதற்கான முயற்சியில் புதுடில்லியில் உள்ள நான்குகட்சிகளையும் சேர்ந்த உயர்மட்ட தலைவர்கள் ஈடுபட்டுவருகின்றனர் என்று அறிவிக்கப்பட்டது.

நான்கு கட்சிகளாகச் சிதறுண்டுள்ள காங்கிரஸ் கட்சிகளை ஒன்ருக இணைப்பதன் மூலம் ஒரு சக்திமிக்க கட்சி ஒன்றை உருவாக்கலாம் என்ற நோக்கத்துடனேயே இந்த முயற்சி மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த வேளையில் இந்த நான்கு கட்சிகளையும் சேர்ந்த தலைவர்கள் கலந்து கொண்ட கூட்டம் ஒன்று நேற்று பெங்களூரில் நடைபெற்றது. (இ)

மலேஷியாவில் உள்ள

வியட்நாம் அகதிகளுக்கு புனர்வாழ்வுத்திட்டம்

நியூயோர்க், ஜூலை 4

மலேஷியாவில் தஞ்சம் புகுந்திருக்கும் வியட்நாம் அகதிகளுக்கும் புனர்வாழ்வு அளிக்கும் திட்டம் ஒன்றை ஐ. நா பொதுச்செயலாளர் டாக்டர் வால்ட்ஹெய்ம் மேற்கொண்டுள்ளார்.

பொதுக்காரியதரிசியின் திட்டத்திற்கு லண்டனில் உள்ள நிறுவனம் ஒன்று நிதிஉதவி செய்ய முன்வந்துள்ளது.

இத் திட்டத்திற்கமைய மலேசிய கடற்கரையில் முகாமிட்டிருக்கும் 52 ஆயிர அகதிகளுக்கு குடிநீர் வசதி கழிவுகளை அகற்றும் வசதி ஆகியன மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

இதேவேளையில் கனடாவில் உள்ள மாகாணம் ஒன்று 1500 அகதிகளைப் பொறுப்பேற்க முன்வந்துள்ளது. (இ)

கானாவின் யு. எஸ். தூதரகத்தினுள் புகுந்து மாணவர் குழப்பம்

உள்நாட்டுவிவகாரங்களில் அமெ. தலையிடுகிறதாம்

ஆக்ரா, ஜூலை 4

கானாவில் உள்ள அமெரிக்க தூதுவராலயத்துக்குள் கானா பல்கலைக்கழக மாணவர்கள் புகுந்து பெரும் குழப்பம் விளைவித்தனர்.

கானாவின் உள்நாட்டு விவகாரங்களில் அமெரிக்கா தலையிடுவதாகக் குற்றம்சாட்டியே இவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனராம்.

தூதரகத்தினுள் அத்துமீறிப் பிரவேசித்த மாணவர்கள் அமெரிக்க தேசிய கொடியை கிளித்தெறிந்தனர் என்றும் யுத்த கீதம் இசைத்துடன் புதிய டாக்டர் அசுகுக் இரகசிய இராணு நீதிமன்றத்துக்கும் ஆதரவு தெரிவித்து கோஷமிட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மாணவர்கள் கையிலும் தலையிலும் சிவப்பு பட்டி அணிந்திருந்தனராம். (இ)

ஆஸி. பாக். கிரிக்கட் கோஷ்டிகள் இவ்வாண்டு இந்தியாவில் சுற்றுப் பயணம்

புதுடில்லி, ஜூலை 4

ஆஸ்திரேலிய கிரிக்கெட் கோஷ்டியும், பாகிஸ்தான் கிரிக்கெட் கோஷ்டியும் இவ்வாண்டு இறுதியில் இந்தியாவில் தலா ஆறு டெஸ்ட் போட்டிகளை விளையாடும்.

இத்தகவலை இந்திய கிரிக்கட் சபைச் செயலாளர் ஜஹுப் குலாம் முகமட் தெரி .

லண்டனில் நடைபெற்ற சர்வதேச கிரிக்கட் சங்க கூட்டத்தில் கலந்து கொண்டபின் ஜஹுப் முகமட் நேற்று நாடு திரும்பினார்.

ஆஸி. 6 டெஸ்ட்

ஆஸ்திரேலியாக்கோஷ்டி இந்தியாவில் [illegible] செப்டம்பர் மாதம் 1-ந் திகதி முதல் நவம்பர் 9-ந் திகதி வரை 6 டெஸ்ட் போட்டிகளில் கலந்துகொள்ளும்.

நவம். 12-ந் திகதி முதல் 80-ம் ஆண்டு ஜனவரி 25 முதல் இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்யும் பாகிஸ்தான் கோஷ்டியும் 6 டெஸ்ட் போட்டிகளில் கலந்துகொள்ளும். [இ]

இந்திரா காங்கிரஸ் நடவடிக்கை

பெங்களூர், ஜூலை 4

கர்நாடக முதல்வர் திரு. தேவராஜ் அர்ஸ் கூட்டும் மாநாட்டில் கலந்துகொள்ளும் இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் உடனடியாக கட்சியிலிருந்து வெளியேற்றப்படுவர்.

இந்திரா காங்கிரஸ் பொதுக் காரியதரிசி திரு. ஏ. ஆர். அந்துலே மேற்கண்டவாறு சகல உறுப்பினர்களுக்கும் அறிவித்துள்ளார். (இ)

வழக்கம்பரையில்

அபிராமி அந்தாதி விரிவுரை

[சுழிபுரம்]

வழக்கம்பரை அம்மன் கோயிலில் அபிராமி அந்தாதி விரிவுரை சென்ற வெள்ளிக்கிழமை முதல் நடைபெற்று வருகின்றது. தினமும் மாலைப் பூசையைத் தொடர்ந்து அறிஞர்கள் விரிவுரை செய்து வருகின்றனர்.

வழக்கம்பரை சனசமூக பஜனைச் சபையினரால் ஏற்பாடு செய்யப்பட்டு நடாத்தப்படும் இவ்விரிவுரை நிகழ்ச்சியின் இறுதிநாள் விரிவுரைப் பூர்த்தி எதிர் வரும் சனிக்கிழமை பண்டிதர் தி. பொன்னம்பலவாணரால் நிகழ்த்தப்படும். அன்று சிறப்புரையாக ஆசிரியர் திரு. கி. குமாரசாமியின் உரையும் இடம் பெறும். [ச]

உ. அ. அதிபர் நியமனம்

[யாழ்ப்பாணம்]

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபராக தற்போது அம்பாறையில் கடமையாற்றும் திரு. எஸ். துரைராசா இம்மாதம் 10 தேதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார். [ச]

மதம் மாறுவதை சட்டம் மூலம் தடைசெய்யவேண்டும்!

அமைச்சர் 'இராசு' வுக்கு கோரிக்கை

[மட்டக்களப்பு]

"மதம் மாறுவதையும், மாற்றப்படுவதையும் தடை செய்ய, சட்டம் கொண்டு வரப்படவேண்டும். இவ்விதமான சட்டம் கொண்டுவரப்படுவதன் மூலமே, இந்து சமயத்தை பிறமதத் தாக்கங்களிலிருந்து பாதுகாக்கமுடியும்" என்று இந்து சமய விவகார அமைச்சர் திரு. செ. இராசதுரையைக் கோரும் தீர்மானம், மட்டக்களப்பு இந்து சமய விருத்திச் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட வேறு சில தீர்மானங்கள் வருமாறு:

"இந்து சமயத்தைச் சார்ந்த வயோதிபர்கள், ஆண் பெண் இருபாலாருக்குமான தனித்தனி வயோதிபர் விடுதிகளை மட்டக்களப்பில் அமைக்க வேண்டும்.

"உதவிக்கு யாருமில்லாமல், வாழ்வகையற்று விரக்தியின் விளிம்பிலிருந்து சீவியத்துக்குப் போராடிக் கொண்டிருக்கும் இந்து சமயத்தைச் சேர்ந்த இளம் பெண்களுக்கென தாபரிப்பு நிலையமொன்றினை உருவாக்க வேண்டும். இந்த நிலையத்தில் தையல், நெசவு, பன்னவேலை போன்ற வருவாய் வரக்கூடிய தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும்.

"இந்து சமயக் கலாச்சாரக் கட்டிடமொன்றை மட்டக்களப்புப் பட்டணத்தில் நிறுவ வேண்டும். இக் கட்டிடம் சகல வசதிகளும் நிரந்தரமாகக் கொண்ட அரங்க அமைப்பு, வெளியிடங்களிலிருந்து வரும் இந்துக்கள் தங்கிச் செல்லக்கூடிய வசதிகள் முதலியவற்றைக் கொண்டதாக அமையவேண்டும்.

"மட்டக்களப்பு மாவட்டத்தில், இந்து சமயம் படிப்பிப்பதற்குத் தகுதியான ஆசிரியர்கள் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் பற்றாக்குறையாக உள்ளது. இருவாரங்களுக்கு முன்னர் மட்டக்களப்பிலிருந்து மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களுக்கு இந்து சமயத்தைச் சேர்ந்த பத்து ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதால் நிலைமை மிகவும் மோசமடைந்துள்ளது. இது விஷயத்தை கவனத்துக்கு எடுத்து நோக்கம் நிறைவேற ஆவன செய்யவேண்டும்.

"இந்துப் பல்கலைக் கழகமொன்றை நிறுவத் தாங்கள் திட்டமிட்டுள்ளதை ஆதரிக்கும் எமது சங்கம்; மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையை பூரணத்துவம் பொருந்திய ஒரு சைவாசிரியர் கலாசாலையாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

"விபுலானந்த அடிகளாரின் உருவம் பொறித்த தபால் தலை-முத்திரை ஒன்றை வெளியிட அரசாங்கத்தைக் கோரி ஆவன செய்ய வேண்டும்" என்று கோருகின்றோம்.

5-வது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு

(கொழும்பு)

மதுரையில் நடைபெறவுள்ள ஐந்தாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தால் வெளியிடப்படவுள்ள உலகத் தமிழ் எழுத்தாளர் யார்? எவர்?' என்ற நூலில் இடம் பெறுவதற்கு இதுவரை விண்ணப்பிக்காதவர்கள் உடனடியாக திரு. க. நவசோதி 29 ஸ்ரீ சிவானந்த வீதி, கொட்டாஞ்சேனை கொழும்பு-13 என்ற முகவரிக்கு பெயர், புனைப் பெயர், முகவரி, ஆணா பெண்ணா, தாய் மொழி, அறிந்த பிறமொழிகள், நாட்டினம், பிறந்த திகதி, கல்வித் தகைமை பெற்ற பட்டம், தொழில், சென்ற நாடுகள் முதலாவது நூல் எழுதப்பட்டபோது வயது, வெளியிடப்பட்ட நூல்கள் பெற்ற விருதுகள், விரும்பும் நூலும் நூலாசிரியர்களும், இலக்கியம் தவிர்ந்த ஆர்வம் கொண்டுள்ள பிற துறைகள் போன்ற விவரங்களை அறியத்

5-ம் பக்கம் பார்க்க

புதிய ரயில் சேவை

[உடுப்பிட்டி]

கிளிநொச்சியிலிருந்து காங்கேசன்துறைவரை புதிய ரயில் சேவையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்புதிய ரயில் சேவை தினசரி அதிகாலை 5-30 மணிக்கு கிளிநொச்சியிலிருந்து புறப்படும்.

Hedonal
M60%
உங்கள் பயிருக்கு பாயர் பாதுகாப்பு
BAYER
msIADS

வல்லதே வாழும்!

வல்லவன் வாழ்வான் என்பது பழமொழி. பயிர் பச்சை, செடி, கொடிகளிலும் அப்படித் தான். வல்லதே வாழும். பசளை, உரங்கள் பயிர்களைச் செழிக்கச் செய்தாலும், தேவையற்ற களைகள், புதர்ச் செடிகளும் அவற்றின் சாரத்தை உறிஞ்சி எடுத்துக் கொள்ளும். சிறப்பான களைக் கட்டுப்பாடு இதனால் தான் அவசியமாகிறது. விளைச்சலைக் கூட்டி இலாபத்தை பெருக்க, இது மிக முக்கியம்.

ஹெடோனால் எம் 60%

60% எம். சி. பீ ஏ. ஏமின் உப்புகள் கொண்டது. அகன்ற இலைக் களைகளையும் புதர்ச் செடிகளையும் அது அறவே அழிக்கும்.

ஹெடோனால் எம் 60% நெற்பயிரைப் பாதிக்கும் அகன்ற இலைக் களைகள், புதர்ச் செடிகளை, மிகச் சிறப்பாகவும் சிக்கனமாகவும் கட்டுப்படுத்தும் தரமான களைநாசினி. அது உங்கள் நெற் பயிரைப் பாதுகாப்பதுடன் இலாபத்தையும் பெருக்குவது நிச்சயம்.

தரமான பாயர் பீடைநாசினிகளைப் பாவியுங்கள்.

இலங்கையில் பாயர் பீடைநாசினிகளைத் தயாரிப்போர்:
ஹேக்கெம் லிமிட்டெட்
400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.
தொலைபேசி: 93563, 96331-6

வெஸ்லி
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
பட்டி
விக்கிரமாதித்தன்

ஜனத்திரள் நிறைந்த
3வது வாரம்
Rio Phone: 7607
(Jaffna) Daily 10-30, 4-45, 7-00 &
9-30 p.m.
THE ARENA
Strictly for adults.
Sex Thrill.

5-வது...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இந்த நூல் வெளியீட்டிற்குப் பொறுப்பாயுள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனப் பணிப்பாளர் பேராசிரியர் ச வெ சுப்பிரமணியன் நான்காவது இஸ்லாமியத் தமிழிலக்கிய மாநாட்டில் கலந்துகொள்ள வருகை தந்துள்ளதோடு அவர் எதிர்வரும் 6-ம் திகதி தாயகம் திரும்புவதால் அவரிடம் இவ்விடயங்களைக் கையளிப்பதற்காக உடனடியாக ஈழத்து எழுத்தாளர் இவ்விவரங்களை அனுப்பி வைக்குமாறு திரு. நவசோதி வேண்டுதல் விடுத்துள்ளார்.

கொட்டகை நிறைந்த 4-வது வாரம்
REGAL Daily at 2-00. 4-30, 7-00
& 9-30 p. m. only
(Jaffna) Saturday & Sunday at 10-30 a.m.
URSULA ANDRESS
in
Mountain In The Jungle
Color — Scope — Adults
சிறுவர்கள் வயதுவந்தவர்களுடன் வந்தால் அனுமதிக்கப்படுவர்.

3-வது வாரம்
ராணி (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்., லதா, சந்திரகலா, மஞ்சுளா
நடித்த
உலகம் சுற்றும் வாலிபன்
கொட்டகை நிறைந்த காட்சி.

[குறிப்பிடப்பட்ட சில தினங்கள் மட்டும்]
மனோகரா 10-30, 2-30, 6-30, 9-45
(யாழ் நகர்)
சிவாஜி-பத்மினி
கருணாநிதியின்
பணம்
[புதிய பிரதி]
[இதுவே யாழ்நகரில் கடைசித்தடவையாக காண்பிக்கப் படுவதால் அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்]

82வது தினம். (கடைசி சில தினங்கள் மட்டும்)
தினசரி 4 காட்சிகள்
ராஜா யாழ். நகர்
எம். ஜி. ஆர் - ஜெயலலிதா
நடித்த
ஒளிவிளக்கு
புதிய பிரதி ஈஸ்மன் கலர்

இன்று மட்டும்
ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6 1
முத்துராமன் - தேவிக
கல்யாணகுமார் நடித்த
நெஞ்சில் ஓர் ஆலயம்
[மறு பிரதி]

சில தினங்கள் மட்டும்
வின்சர் [யாழ்ப்பாணம்]
போன்: 400
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-00, 6-00, & 9-30
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
தினசரி 10-30, 2-30, 6-30, & 9-45.
கே. பி. சுந்தராம்பாள் நடித்த
ஒளவையார்

லிடோ யாழ். நகர்
போன் 7693 தினசரி 4 காட்சிகள்
இன்று மட்டும்
சியாமளா

"பலாத்கார - பயங்கர சம்பவங்களில்

உரும்பராய் இளைஞர்களே அதிகமாக ஈடுபட்டனர்

சன்சோனிக் கமிஷனர்முன்பாக முன்னாள் யாழ். பொலிஸ் அதிபர்

[கண்டி]

1972ம் ஆண்டு குடியரசு தினமான மே மாதம் 22ம் திகதி யாழ் மாவட்டத்தில் பல பயங்கர பலாத்கார சம்பவங்கள் இடம்பெற்றன. இச் சம்பவங்களையிட்டு பல இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர். பலாத்கார, பயங்கர சம்பவங்களில் ஈடுபட்டவர்கள் என்று இவர்கள் கைதுசெய்யப்படவில்லை. கறுப்புக்கொடிகளை ஏந்திக் கொண்டு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டதற்காகவே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்''

இவ்வாறு கண்டியில் நடைபெற்றுவரும் சன்சோனிக் கமிஷன் விசாரணையில் மூன்றாவது தினமாகத் தொடர்ந்து சாட்சியமளித்துவரும் முன்னாள் யாழ்ப்பாண பொலிஸ் அதிபர் திரு. கே. எம். டி. ஆரியசிங்க குறிப்பிட்டார்.

சாட்சியை அரசதரப்பு சட்டத்தரணி திரு பி தென்னக்கோன் நெறிப்படுத்தினார்.

திரு. ஆரியசிங்க தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது: "குடியரசு தினமான மே 22ம் திகதி யாழ்ப்பாண மாவட்டத்தில் 49 பஸ்கள் சேதப்படுத்தப்பட்டன. 6 பஸ்களும் பல புகையிரதப் பெட்டிகளும் தீக்கிரையாக்கப்பட்டன. இவை தவிர பல பயங்கர பலாத்கார சம்பவங்களும் இடம்பெற்றன. இச் சம்பவங்கள் அனைத்தையும் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த இளைஞர்களே முன்னின்று நடத்தினர்.

"குடியரசுதினமான மே 22ஐயும் அதற்கு முன்னைய பின்னைய தினங்களான 21, 23ம் திகதிகளில் ஹர்த்தால்களை நடாத்தி துக்கம் அனுட்டிக்கவும் தயாராகுமாறு தமிழ்மக்களிடம் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் வேண்டுகோள் விடுத்திருந்தனர். இவ் வேண்டுகோளில் கடைகளை மூடி, பாடசாலைக்குச் செல்லாமல் கறுப்புக்கொடிகளையும் தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் கொடிகளையும் உயர்த்துமாறும் கேட்கப்பட்டிருந்தது. நான் யாழ் மாவட்டத்தில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வெளி மாவட்டங்களிலிருந்து 500 மேலதிகப் பொலிசாரை 5 தினங்களுக்கு முன்னரே வரவழைத்து கடமையில் ஈடுபடுத்தியிருந்தபோதிலும், பல பயங்கர பலாத்கார சம்பவங்கள் இடம்பெற்றன. இ சம்பவம் காரணமாக சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக பல நூறுக்கணக்கான இளைஞர்கள் ஒன்றுசேர்ந்து உண்ணாவிரதம் மேற்கொண்டனர். உண்ணாவிரதத்தில் பங்குகொண்ட இளைஞர்களுக்கு தலைமை வகித்த சத்தியசீலன், சிவகுமாரன் ஆகியோர் உரும்பராயைச் சேர்ந்தவர்கள். பலாத்கார பயங்கர சம்பவங்களில் ஈடுபட்டிருந்த இளைஞர்களின் பெரும்பாலோர் உரும்பராயைச் சேர்ந்தவர்களாகவே காணப்பட்டனர்'' என்றும் திரு. ஆரியசிங்க தமது சாட்சியத்தில் குறிப்பிட்டார். (செ)

மகாஜன வெற்றி

[தெல்லிப்பழை]

அண்மையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டிகளில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும், ஹாட்லிக் கல்லூரிக்கும் எதிராக மகாஜனக் கல்லூரி மோதிக்கொண்டதில் மகாஜனா வெற்றிபெற்றது.

மகாஜனாவும், ஸ்கந்தாவும் மோதிக்கொண்டதில் முதலாவது ஆட்டத்தில் மகாஜனக் கல்லூரி நான்கு விக்கட்டை இழந்து 124 ஓட்டங்கள் பெற்றது. ஸ்கந்தவரோதயாக் கல்லூரி சகல விக்கட்டுகளையும் இழந்து 109 ஓட்டங்களை பெற்றது. மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த அரவிந்தன், கதிரவன் தலா 43 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சாளர்களான அரவிந்தன், அருணன் தலா 5 விக்கட்டுகளை கைப்பற்றியிருந்தனர்.

ஹாட்லிக் கல்லூரிக்கும் மகாஜனாவுக்குமிடையே நடைபெற்ற மோதலில் முதலாவது ஆட்டத்தில் ஹாட்லிக் கல்லூரி சகல விக்கட்டுக்களையும் இழந்து 79 ஓட்டங்களை பெற்றது. மகாஜனா சகல விக்கட்டுக்களையும் இழந்து 100 ஓட்டங்களை பெற்றது. மகாஜனா பந்து வீச்சாளரான ரவிசங்கர், அருணன் தலா 3 விக்கட்டுக்களை கைப்பற்றியிருந்தனர்.

கொழும்பில்

தலைமறைவாகியுள்ள 60 இளைஞர்கள்

கண்டுபிடிப்பதில் பொலிஸார் தீவிரம்

(கொழும்பு)

வடபகுதி வன்செயல்களில் சம்பந்தப்பட்டவர்கள் என்று பொலிசார் சந்தேகிக்கும் சுமார் அறுபது இளைஞர்கள், கொழும்பில் 'தஞ்சம்' புகுந்திருப்பதாக உயர்மட்டரீதியில் நடைபெறும் பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவருகிறது.

வடபகுதி வன்செயல்களில் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் இவர்கள், கொழும்பின் பல பகுதிகளிலும் பரவலாக தலைமறைவாக இருப்பதாகவும் நண்பர்கள் இவர்களுக்கு அபயமளித்துள்ளதாகவும், இந்த இளைஞர்கள் நண்பர்களுடன் வாடகை அறைகளிலும், வீடுகளிலும், ஹோட்டல்களிலும் வசித்துவருவதாகவும் பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவருகிறது.

நிலைமை இவ்வாறாக இருந்தபோதிலும் சந்தேகநபர்களைக் கண்டுபிடிப்பதில் பொலிசார் தீவிர நடவடிக்கைகளை இப்பொழுது மேற்கொண்டுவருகின்றனர் என்று பொலிஸ்வட்டாரங்களிலிருந்துதெரியவருகிறது. [தி]

நாகம்ஸ் [சுன்னாகம்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி, விஜயா
எதிரொலி

மகத்தான வெளியீடு!
சாந்தி யாழ். நகர் - போன் 7642
10-30, 2-30, 6-30, 9-45.
நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த இந்திப் படவுலகின் முடிசூடா மன்னன், பழம் பெரு நடிகன் "அக்பர்" புகழ் திலிப் குமார்
(இரட்டை வேடங்களில்)
ஆராதனா புகழ் சர்மிலாதாகூர்...
இணைந்த
டாஸ்தான்
இந்தி — கலர் — இசை — லக்ஷ்மிகாந்த், பியரேலால் இனிமையான பாடல்கள்! அழகு சொரிக்கும் மலைப் பிரதேசங்களின் இயற்கை எழில் வர்ணக்காட்சிகள்! பயங்கர சண்டைகள்! உணர்ச்சியைத் தூண்டும் கவர்ச்சிக் கன்னிகளின் நடனங்கள் யாவும் நிறைந்த வர்ணக்காவியம்
DILIPKUMAR... SHARMILATAGOOR... PRAN...
DUSTAN
THE BEST HINDI COLOUR FILM
Music: Luxmikhant Pyarelal
SUSPENSE THRILLER
Ran Over 100 Days in Colombo

வல்லிபுர ஆழ்வார் மணவாளக் கோல திருவிழா

[புலோலி]

சரித்திரப்பிரசித்தி பெற்ற துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி தேவஸ்தான மணவாளக்கோல விழா இம்மாதம் 11ம் திகதி புதன்கிழமை நடைபெறவிருக்கிறது. பகல் நவோத்தர சகஸ்ர சங்காபிஷேகமும், இரவு திருக்கல்யாணம், கதாப்பிரசங்கமும் நடைபெறுமென தர்மகர்த்தாசபை முகாமைத் தர்மகர்த்தா திரு ச. மா கந்தசாமி அறிவித்துள்ளார்.

துர்க்காதேவி ஆலய

உற்சவ மூர்த்திக்கு இன்று கும்பாபிஷேகம்

ஈழநாட்டின் வடபகுதியின்கண் அமைந்துள்ள எழில்மிகு நகராம் தெல்லிப்பழையில் அண்டிவரும் அடியவர்க்கு அருள்பாலிக்க எழுந்தருளியிருக்கும் அன்னை துர்க்கை அம்பாள் உற்சவமூர்த்திக்கு இன்று வெகு கோலாகலமாகவும், பக்திப்பரவசமாகவும் மகாகும்பாபிஷேகம் நடைபெற இருக்கின்றது.

சென்ற ஞாயிறன்று காலை யாழ்ப்பாணம் கன்னாதிட்டி காளி அம்பாள் ஆலயத்தில் இடம்பெற்ற விசேஷ அபிஷேக ஆராதனைகளை அடுத்து ஆயிரக்கணக்கான அடியார்களின் பக்திப்பரவசத்தில் திளைத்தவாறு பழம் பெருமை பெற்ற பதியுறை இராமநாதன் கல்லூரிக்கு துர்க்கை அம்பாள் எழுந்தருளி அடியவர்களின் இடர்களைய அங்கு வீற்றிருந்தார்.

வீதி எங்கும் மகாகும்பங்களும், மாவிலைத்தோரணங்களும் அசைந்தாடி அம்மனை வழிபட, பக்தர்கள் பாதை ஓரங்களில் நின்று அம்பாளின் அருள்வேண்டி கைதொழ, மின்னும் விளக்கொளிகள் மின்சாரதீபங்கள் கண்ணுக்கு இனிய நல்லதொருகாட்சிகள் இத்தனைக்கும் மத்தியில் அம்பாள் ஆலயத்தில் எழுந்தருளிய காட்சி ஆலயத்தில் குழுமி நின்ற அடியார்கள் உள்ளமெல்லாம் உவகையில் துள்ள வெள்ளமெனத் திரண்டிருந்த கள்ளமில்லா உள்ளத்தார் அகத்தையும் முகத்தையும் குளிர வைத்தது.

இன்று நடைபெறும் இக்கும்பாபிஷேகத்தில் அன்னையின் அழகும், அருளும், பொலிவும், அமைப்பும் விளங்க இவ்விக்கிரகத்தை வார்த்து செதுக்கிச் செம்மை செய்து இருவருள் வனப்புக்கொடுத்தவர் திரு து சின்னராசா ஆச்சாரியார் ஆகும்.

யாழ்ப்பாணம் கன்னாதிட்டியைப் பிறப்பிடமாக கொண்ட திரு சின்னராசா தெய்வ நம்பிக்கையும், கடமையுணர்வும் நிரம்பப்பெற்றவர். அம்பாவின் அருட்கருணையில் முற்றுகத் தோய்ந்தவர். அன்னையின் பூரண அருள்பெற்ற அவரின் வார்ப்பு வெகு அற்புதமாக அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று நடைபெறும் அம்பாளின் குடமுழுக்கில் அன்னையின் அடியவர்கள் தாமும் தோய்ந்து அல்லல் தீர்ந்து அருள் பெற்றுய்ய வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

--மயூரன்

நயினை உற்சவம்

தண்டிகைத் திருவிழா

[யாழ்ப்பாணம்]

நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலய 11ம் நாள் தண்டிகைத் திருவிழா இன்று நடைபெறுகிறது.

பகல் விசேஷ அபிஷேக ஆராதனைகளும், பஞ்சமுகார்ச்சனையும் இடம்பெறும்.

மாலை 6 மணிக்கு மேளக்கச்சேரியுடன் ஆரம்பமாகும் இரவு நிகழ்ச்சிகளில் பண்ணிசைச் செல்வன் திரு எஸ் ஆர் திருஞானசம்பந்தனின் பண்ணிசையும், பக்திப்பாடலரசு திரு ஏ ஆர் கிருஷ்ணமூர்த்தியின் பக்திப்பாடல் நிகழ்ச்சியும் இடம்பெறும். இரவு அம்பாள் பூந்தண்டிகையில் எழுந்தருளிவீதிஉலாவருவார். [ஈ]

மகாகும்பாபிஷேகம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் அரியாலை வெட்டுக்குளம் ஸ்ரீ நாச்சியம்பாள் மகாகும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை நடைபெறவுள்ளது. [செ]

மங்கல நாண் பூண் விழா அழைப்பு!

மணமகன்
திருவளர் செல்வன்
ஸ்ரீரங்கநாதன்
(நீர்பாசன இலாகா
பதவியா)

மணமகள்
திருநிறை செல்வி
குமுதாம்பிகை
(மக்கள் வங்கி
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்)

காலம்: 06-07-1979
தினம்: வெள்ளிக்கிழமை.
நேரம்: 12-02—12-42
இடம்: செல்வச்சந்நிதி முருகன் கோவில்.

அனைவரும் வந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

திரு / திருமதி
சு. வேலாயுதபிள்ளை
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

திருமதி மகேஸ்வரி
அரசரத்தினம்
52, பலாலி வீதி,
கோண்டாவில்.

2951

வேலணை

ப. நோ. கூ. சங்க தலைவர் தரும் விளக்கம்

[யாழ்ப்பாணம்]

வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தற்போதைய நிர்வாகம் தனியார் துறையினருடன் போட்டியிட்டு நுகர்ச்சிப்பகுதியை லாபகரமாக வழிநடத்துவதாக சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இம்மாதம் 1ம் தேதி "ஈழநாடு" இதழில் பிரசுரங்கள் விநியோகம் என்ற தலைப்பில் வந்த செய்தியை மறுப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிப்பதாவது: தனியார் ஒருவருக்குக் கையளிக்கப்பட்ட எரிபொருள் விற்பனவு நிலையத்தைச் சங்கத்திற்கு மீளப் பெற்று, பீடித்தொழிலையும் கட்டட ஒப்பந்த வேலைப்பகுதியையும் புதிதாக நிறுவி பலருக்கு வேலைவாய்ப்பு வழங்கியதோடு சங்க ஊழியருக்கும் 50 ரூபா சம்பளப் படியும் மிகையூதியமும் வழங்கப்பட்டுள்ளது. சங்கத்திற்கு சொந்தமான காணி வாங்கிக் காரியாலய கட்டடமும் கட்டப்படுகிறது.

தற்போதைய நிர்வாகத்தைப் பாராளுமன்ற உறுப்பினரும், கூட்டுறவு ஆணையாளரும், கூ பரிசோதகரும், ஊழியரும் பாராட்டியுள்ளனர். பாவனையாளரும் பாராட்டுகின்றனர். [க]

---

3 பேர் பலி

சென்னை, ஜூலை 4

ராமேஸ்வரத்தில் இரு மீனவர் கோஷ்டிகளுக்கிடையில் ஏற்பட்ட மோதலின்போது மூவர் பலியாகியுள்ளனர்.

கலவரம் மோசமடைந்ததால் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். காயமடைந்தவர்கள் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

இன்றைய...

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

துலாம்: முன்னேற்றம் தடைப்படும், குறுக்குவழித் தலையீடு குழப்பத்தை ஏற்படுத்தலாம் எதேச்சாதிகாரப் போக்கால் சிலரை பகைத்துக்கொள்ள நேரிடும், மன அடக்கம் நன்று.

விருச்சிகம்: அறவழியில் நாட்டம் பிறக்கும், புண்ணிய ஸ்தலயாத்திரை ஒன்றுக்குத் திட்டமிடப்படலாம், நண்பர்களின் நல்லுரைகள் உங்களைப் பரவசப்படுத்தும், தெய்வ சிந்தை மேலோங்கி நிற்கும்.

தனுசு: குடும்பத்தில் சிறு பூசல் தலைதூக்கும், பெரியவர் ஒருவருடன் அபிப்பிராய பேதம் தோன்றக்கூடும், அமைதியுடன் இருக்கவும்.

மகரம்: நல்லதைச் செய்வீர்கள், நலன் பெருகும், பிரமுகர்கள் உங்களைத் தேடி வருவார்கள், சமூகத்தில் மதிப்பு உயரும், அரசியல் வாதிகள் அதிர்ஷ்ட தேவதையை அணைத்துக்கொள்வர்.

கும்பம்: அதிர்ஷ்டகரமான தினம். சிலர் வாழ்க்கையில் திரவிய இலாபத்திற்கும் இடமுண்டு, மனைவாழ்வில் மகிழ்ச்சி தென்படும், வீட்டில் காரியமொன்று இடம் பெறலாம், பணம் பத்தும் செய்யும்.

மீனம்: தவறுகள் நடக்கலாம், நிலையும் தடுமாறும். நண்பர்களே காலை வாரிவிடக்கூடும், சிலருக்கு அன்னிய வாசம் ஏற்படலாம்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

ஆஸி, மே. இந்திய கிரிக்கட் வீரர்கள் இலங்கை வருவர்

நமது வீரருக்கு பயிற்சி அளிப்பர்

(கொழும்பு)

இலங்கை கிரிக்கட் வீரர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக மேற்கிந்திய, அவுஸ்திரேலிய கிரிக்கட் வீரர்களை இலங்கைக்கு அழைக்க விளையாட்டு அமைச்சு தீர்மானித்துள்ளது.

முக்கியமாக விரைவாகப் பந்து வீசுபவர்களை அழைத்தே இலங்கை வீரர்களுக்கு பயிற்சி அளிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. [இ]

சிறைச்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தினம் ஆஜரானபோது, அவர் சார்பில் சட்டத்தரணிகள் திரு ஆர் ஜே செல்வரத்தினம், க நடராசா, எஸ் சிவபாக்கியநாதன் ஆகியோர் அவரை மன்னித்து விடுதலை செய்யுமாறு கோரினர்.

25வருடசேவையாற்றியுள்ள இவர் கடந்த 6வருடங்களாக சுப்ரிண்டனாகவுள்ளாரெனவும், அவரைத் தண்டிப்பது அவரது வேலைக்கே ஆபத்தானதெனவும் சட்டத்தரணிகள் தெரிவித்தனர். இதையடுத்து நீதிபதி திரு எஸ் ஆனந்தகுமாரசாமி அவரை எச்சரித்து விடுதலை செய்தார்.

இறக்குமதி...

[1-ம்பக்கத் தொடர்ச்சி]

கப்படுகின்றது என அமைச்சர் தெரிவித்தார்.

பல்வேறு துறைகளிலும் தொழில்புரியும் ஊழியர்கள தமது போக்குவரத்துக்களை இலகுவாக்கவும் செலவினங்களைக் குறைக்கவும் இவை ஏற்பாடு செய்யப்படுகின்றது.

பைசிக்கிள்களுக்கு இதுவரை 250 ரூபாய் அல்லது கொள்விலையில் 50 வீதம் தீர்வை விதிக்கப்பட்டுவந்தது இறக்குமதித்தீர்வைகள ரத்துச் செய்யப்படுவதால் இந்த வாகனங்களின் விலைகளில் கணிசமான வீழ்ச்சி ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

அலங்காரஉற்சவம்

[யாழ்ப்பாணம்]

நல்லூர் முத்துவிநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது: பத்துத் தினங்கள் நடைபெறும் இவ்வுற்சவத்தின் இறுதிநாளான 10ம் திகதி செவ்வாய்க்கிழமை பகல் விசேஷ ஆராதனைகளும் மாலையில் தவில்கச்சேரி, மெல்லிசைக்கச்சேரி என்பனவும் இடம்பெறும், [ஈ]

விண்ணப்பம் கோரப்படுகிறது

(புலோலி)

அரசாங்கத்தின் இரண்டாவது ஆண்டு பூர்த்தி விழாவையடுத்து தேர்தற் தொகுதிகள் தோறும் பத்து வீடுகள் கட்டி வீடற்ற ஏழைக் குடும்பங்களுக்கு வழங்கும் அரசாங்கத்தின் திட்டத்திற்கமைய பருத்தித்துறைத் தேர்தற்தொகுதியில் குடத்தனை மணற்காட்டில் அமைக்கப்பட்ட 10 வீடுகளின் வேலைகள் யாவும் பூர்த்தியாகியுள்ளன.

இவ்வீடுகள் யாவும் இம்மாதம் 21ம் திகதி இத்தேர்தற் தொகுதியைச் சேர்ந்த வீடற்ற ஏழைக் குடும்பங்களுக்கு வழங்கப்படுமெனவும்; இதற்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 13ம் திகதிவரை தன்னால் ஏற்றுக்கொள்ளப்படுமெனவும் வடமராட்சி வடக்கு கிழக்கு பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலும் தெரிவித்தார்.

குஷிபா விநியோகஸ்தர்கள் வழங்கும்
ஜனதா தேயிலை ஜூன் மாத
பரிசு திட்டம்

1-வது பரிசு: A—1198
2-வது பரிசு: B—1018
3-வது பரிசு: A—3180

ஆறுதல் பரிசுகள்
C—213 D—1617
D—237 B—253
D—3586

நன்றி

2955

மரண அறிவித்தல்

டாக்டர் இ. ஆ. சுப்பிரமணியம்

கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த இளைப்பாறிய டாக்டர் இராமர் ஆழ்வாப்பிள்ளை சுப்பிரமணியம் 4-7-79 புதன்கிழமை காலமானார். இவர் காலஞ்சென்ற செல்வமலரின் அன்புக் கணவரும், டாக்டர் இராமசந்திரன் [இந்தியா], டாக்டர் ராஜவேலு [பரந்தன்], டாக்டர் ஸ்ரீவிக்னேஸ்வரா [சிவசக்தி வைத்திய நிலையம் அரியாலை], நந்தீஸ்வரன் [பெருந்தெருக்கள் திணைக்களம் புத்தளம்], பிரேமகுமார் [வைத்திய மாணவன்], இந்திரவதி, பரமேஸ்வரி யசோவதி, டாக்டர் நிமலாவதி [லண்டன்], அருந்ததி [வைத்திய மாணவி], தமயந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், பொன்னுத்துரை [நிர்வாகப் பொறியியலாளர் புத்தளம்], செல்வராசா [லண்டன்], சந்திரா [இந்தியா], சின்னப்பிள்ளை [மருத்துவ மாதி மாணவி], யோகம்மா [அதிபர், இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை யாழ்ப்பாணம்] ஆகியோரின் மாமனும் ஆவார். அன்னாரது பூதவுடல் அரியாலையிலுள்ள இல்லத்திலிருந்து இன்று வியாழக்கிழமை [5-7-79] பிற்பகல் 4-30 மணியளவில் தகனக்கிரியைக்காக சித்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றாரும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

2959

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] மேற்கு வீதி 63ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு ஜூலை மாதம் 5ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QB/8945/78 The Eelanaadu P B No: 49, Telegram: Eelanaadu!
[illegible] 489.